Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No.CC.70/2019 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.7 |
| Name: | திரு.சுப்புராஜ் |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 29.11.2023. | |

**எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.**

**முதல் விசாரணை** : நேரம் : 01.58

நான் தற்போது காவல்துறையில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று சிவகாசி தாலுகா சித்துராஜபுரத்தில் வசித்து வருகிறேன். கடந்த 19.01.2018 ம் தேதி வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது வெம்பக்கோட்டை காவல்நிலையத்திற்கு வந்த தகவலை பெற்று சிவகாசி அரசு மருத்துவமனை சென்று அங்கு காயம்பட்டு மேல் சிகிச்சைக்காக மதுரை செல்லவிருந்த வாகன விபத்தில் காயம்பட்ட நபர் தலைக் காயம் ஏற்பட்டு ஆறுமுகம் என்பவர் பேசமுடியாத நிலையில் இருந்ததால் அவருடன் இருந்த அவரது மகள் மாரியம்மாள் என்பவரிடம்

நடந்த சம்பவத்திற்கு புகார் வாக்குமூலம் 14.30 மணிக்கு பெற்று பதிவு செய்து 16.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 24/2018 பிரிவுகள் 279, 337 இதச ஆக வழக்கு பதிவு செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.7/அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

2) பின்னர் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் புகாரை நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றம் சாத்தூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் காவல் ஆய்வாளர் உத்தரவின் பேரில் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 19.01.2018 ம் தேதி 17.20 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாரியப்பன் மகன் முத்துக்குமார் மற்றும் முத்து மகன் முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் தயார் செய்தேன். ( **மாதிரி வரைபடம் அ.சா.7/ அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

3) பின்னர் சம்பவ இட சாட்சிகள் முருகன் மற்றும் இசக்கிமுத்து மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விபத்தில் காயம்பட்ட ஆறுமுகம் மதுரை அரசு மருத்துவமனை கொண்டு செல்லும் வழியில் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்து 21.15 மணிக்கு வழக்கின் சட்டப் பிரிவை இதச பிரிவுகள் 279, 337 ல் இருந்து இதச பிரிவுகள் 279, 304(ஏ) ஆக சட்டப் பிரிவை மாற்றி சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அ னுப்பி வைத்தேன். ( **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.7/ அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது

சம்பந்தமாக காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

எ.த.கு.வி.

1) சம்பவ இடத்திற்கும், வெம்பகோட்டை காவல்நிலையத்திற்கும் இடையே 6 கிமீ துரம் என்றால் சரிதான். புகார் 4 மணி நேரம் கால தாமதமாக கொடுக்கப்பட்டது என்றால் புகார் காவல்நிலையம் வந்து கொடுக்கப்படவில்லை மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று நான் தான் மருத்துவமனை சென்று புகார் வாக்குமூலம் பெற்றேன். குற்றம் சம்பந்தமான தகவல் காவல்நிலையத்தில் பெறப்படும் போது அந்த தகவல் பொது நாட்குறிப்பில் பதியப்படும் என்றால் சரிதான்.

2) வரைபடம் அ.சா.ஆ 4 ல் இசக்கி என்பவரின் ஓர்க் ஷாப் காட்டப்படவில்லை என்றால் சரிதான். வரைபடம் அ.சா. ஆ 4 ல் வசந்தம் நகர் பஸ் ஸ்டாப் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இரத்தம் சிந்தி கிடந்த தடயமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்ட நபர் ஓட்டி வந்த மிதிவண்டியை நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை. காயம்பட்ட நபர் முதலில் வெல்கேர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்றால் சரிதான். வெல்கேர் மருத்துவமனை மருத்துவர்களை விசாரித்து மருத்துவ ஆவணங்களை கைப்பற்றினேனா என்றால் இல்லை.

3) விபத்து நடைபெற்ற இடத்திற்கு சற்று தள்ளி சர்ஜ் தெரு உள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 31.01.2018 ம் தேதி அன்று நான் நீதிமன்றத்தில் பெறப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட 12 நாட்கள் கால தாமதமாக நீதிமன்றத்திற்கு

அனுப்பப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை சொன்ன நாள் மற்றும் நேரத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், முதல் விசாரணை முடித்து பின்னிட்டு பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. சாட்சிகள் முருகன், இசக்கிமுத்து விபத்தில் இறந்த நபரின் உறவினர்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் சம்பவ நாள் மற்றும் நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல.

4) விபத்தில் இறந்த நபர் சர்ஜ் தெருவில் இருந்து மிதி வண்டியில் வந்து கிழமேல் ரோட்டில் திடிரென்று குறுக்காக கடந்த விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபருக்கு செவித்திறன் குறைபாடு உள்ளது என்றாலும் அவர் வாகனம் வருவதை கவனிக்காமல் அவர் தான் விபத்திற்கு காரணம் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.